DINAMANI

15 NOV 2021

PAGE 3

# புதுச்சேரி பல்கலை.–ராணுவம் இடையே ஒப்பந்தம்

புதுச்சேரி, நவ.14: புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம், இந்திய ராணுவம் இடையே ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கையொப்பமிடப்பட்டது.

பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் இந்திய ராணுவ அதிகாரிகள் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பல்வேறு



புதுச்சேரி பல்கலை.–இந்திய ராணுவம் இடையே கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் பரிமாறிக் கொண்ட பல்கலை. பதிவாளர் அமரேஷ் சமந்தரேயா, மேஜர் ஜெனரல் விவேக் காஷ்யப்.

துறைகளில் முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள முடியும்.

பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங் கூறுகையில், ராணுவப் படைகளுக்குத் தேவையான ஆராய்ச்சிக் கல்வியை பல்கலைக் கழகம் வழங்கும் என்றார்.

இந்தியராணுவப்பயிற்சிப்பிரிவு மேஜர் ஜெனரல் விவேக் காஷ்யப் கூறுகையில், நானோ அறிவியல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, போர்த் திறனியல், ராணுவத்தின் தேவைக்கேற்ப பல படிப்புகளைப் பயில நிகழ் கல்வியாண்டில் அதிக இளம் அதிகாரிகளை அனுப்ப இந்திய ராணுவம் முயற்சி மேற்கொள்ளும் என்றார்.

பல்கலை. பதிவாளர் அமரேஷ் சமந்தரேயா, சர்வதேச உறவுகள்–புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் புல முதல்வர் சுப்பிரமணியம் ராஜி, ஒருங்கிணைப்பாளர் ஹுமாயூன் மற்றும் பல்வேறு புல முதல்வர்கள், துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.